# பெண்ணின் அகஉலக நோக்கில் ‘கனவுகள் கைப்பிடிக்குள்’

*செ.லிட்டில் ப்ளவர், முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் கொடைக்கானல், அட்டுவாம்பட்டி.

**முன்னுரை**

உளவியல் என்னும் அறிவியலும், இலக்கியம் என்னும் ஒப்பற்ற கலையும், ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை எனலாம். பெண்ணின் உணர்வுகள், அதனைச் சார்ந்த எண்ணங்கள், அதையடுத்த அவளின் செயல்பாடுகள், முடிவில் அதுவே பழக்க வழக்கமாக மாறி அவளது நடை, உடை, பாவனையாக அமைகிறது. இதுவே பெண்ணின் ஆளுமை வளர அல்லது அமைய வழி கோலுகிறது. புதைந்து கிடக்கும் எண்ண அலைகள் உலா வருகின்றன. ஆனால் கடுமையாகப் பொங்கி எழும் தன்மை வாய்த்ததாக உள்ளது. இவ்வாறு பொங்கி வரும் எண்ணங்களை ஆண்டாள் பிரியதர்ஷினியின் ‘கனவுகள் கைப்பிடிக்குள்’ வெளிப்படுத்துவதாக இக் கட்டுரை அமைக்கப்பட உள்ளது.

**உளவியல்**

மனிதன் மற்றொருவனின் எண்ணங்களைக் குறித்து ஆராயத் தொடங்கிய நிலையிலேயே உளவியல் தோற்றம் பெற்றது எனலாம்.

“ஆங்கிலத்தில் ‘சைக்காலஜி (Psychology) என்னும் சொல் உளவியல் என்கின்ற தமிழ்ச் சொல்லிற்கு நேரானது. ஆன்மாவவை ஆயும் அறிவியல் (Science of the Soul) என்பதை சைக்காலாஜிக்குப் பொருள்”[1] என்பர்.

உள்ளத்தின் இயல்புகளையும், அவற்றின் செயல்பாடுகளையும் பகுத்து விளக்கும் அறிவியல் துறையினை 1960 - ஆம் ஆண்டு வரையில் உளவியல் என்னும் பெயரால் சுட்டினர். அதன் பிறகு முதன்மையும், தலைமையும் கருதி ‘நடத்தைகளைப் பற்றிய அறிவியலே உளவியல்’ எனப் போற்றும் வழக்கம் உண்டாகியது.

**பெண்ணியம்**

Feminism என்னும் ஆங்கிலச் சொல் Femina எனும் இலத்தீன் மொழியிலிருந்து உருவானது. இதன்பொருள் பெண்மைக்குரிய இயல்புகளை உடையவள் என்பதாகும். இச்சொல் தமிழில் பெண்ணியம், பெண்ணிலை வாதம், பெண்நிலை ஏற்பு, மகளிரியல், பெண் நலக் கொள்கை ஆகிய சொற்களால் அழைக்கப்பட்டு வருகிறது.

பெண்களின் உரிமைகளைப் பறித்து அவர்களைக் கட்டுப்படுத்துவனவற்றையும் அவர்களின் முன்னேற்றத்திற்கு கேடு விளைவிப்பனவற்றையும் நீக்குவதே பெண்ணியம் ஆகும்.

பெண்ணுக்கென்று ஒரு மொழி இருக்கிறது. அவளுடைய ஆழ்மனதின் ஓட்டங்களை சின்ன சின்ன கனவுகளை நடைமுறை வாழ்க்கையை உள்ளது உள்ளபடி சொல்லிப் போகும் மொழி, அவளுடைய மனதின் மொழி. பெண் எழுத்தாளர்கள் தங்களுடைய படைப்புகளில் இத்தகைய பெண் மொழியைத்தான் பயன்படுத்தியுள்ளனர். ஆண்டாள் பிரியதர்ஷினியும் தன்னுடைய ‘கனவுகள் கைப்பிடிக்குள்’ நாவலிலும் பெண்களின் அன்றாட அவள் எதிர்நோக்கும் பிரச்சனைகளை உள்ளது உள்ளப்படி எடுத்துக் கூறுகின்றார்.

பெண்ணிய உளப்பகுப்பாய்வு என்பது பெண்ணின் மன உணர்வுகளைத் துல்லியமாகப் பகுத்து ஆயும் ஒரு திறனாய்வு முறையாகும்.

‘பெண்களின் மன உணர்வுகளை, உள்ளக் குமுறல்களை, விடுபட வேண்டும் என்ற ஆவேசத்தைத் தன்னால் முடியும், சாதிக்க வேண்டும் என்ற நம்பிக்கையைத் தன் மீது பூசப்பட்ட பெண், தீண்டாமைத்தீட்டு, பலவீனம்மிக்கவள், இரண்டாம் தரமானவள் என்ற கற்பிதங்களை உடைக்க வேண்டும் என்ற உணர்வுகளை வெளிப்படுத்தும் பெண்ணின் பேச்சையும், எழுத்தையும், நடத்தையையும் பகுத்தாய்ந்து புரிந்து கொண்டு அவள் இவற்றை

மீறிவர அவளை அவள் முழுமையாக அறிய உதவுவது பெண்ணிய உளப்பகுப்பாய்வாகும்''[2] இவ்வடிப்படையில் பெண்களின் மன நிலைகளை அனுபவ வெளிப்பாடுகளை முதன்முதலில் திறனாய்வு செய்தவர் மிட்சல். இவரது 'பெண்ணியமும் உளப்பகுப்பாய்வும்' என்ற ஆங்கில நூலே முன்னோடி நூலாகும்.

**மகளிரின் உளச்சிக்கல்கள்**

தன் சுயமரியாதை பாதிக்கப்படும் போதும், தான் சிறுமைப்படுத்தும் போதும் முடிந்த வரை பொறுமையைக் காக்கும் பெண்கள் அதற்குப் பின் பொங்கி எழுகின்றார்கள். மொத்தத்தில் ஆண்கள் தொடர்ந்து வெடிக்கும் பட்டாசு என்றால் பெண் ஒரு அமைதி காக்கும் எரிமலை என்று கூறலாம்.

சிக்கல்கள் பற்றிக் குறிப்பிடும் வாழ்வியற் களஞ்சியம், ''சிக்கல்கள் என்பது நனவு உள்ளத்திலிருந்து நனவிலி உள்ளத்திற்கு நசுக்கித் தள்ளப்பட்ட ஓர் எண்ணமோ, எண்ணங்களின் தொகுதியோ ஆகும். அவ்வாறு நசுக்கப்பட்ட எண்ணங்கள் மிகுந்த மெய்ப்பாடு நிறைந்தவையாகக் காணப்படும். ஏனெனில் அவை தங்களுக்குள் ஒன்றோடொன்று முரணாகவோ, நனவு நிலையில் நடைபெறும் நிகழ்ச்சிகளுக்கு மாறுபட்டோ இருக்கும்''[3] என்று விளக்குகின்றது.

**மனச்சோர்வு**

''மனச்சோர்வு என்பது துன்பங்கள் ஊடுருவிய தொடர்ந்து நீடித்துள்ள உணர்ச்சி வசப்பட்ட நிலையைக் குறிப்பன. அதிகச் சார்பு தன்மை, நம்பிக்மை இழந்த மனநிலை, தோல்வி மனப்பான்மை, மனக்கசப்பு, துயரங்கள், துக்கங்கள், உடல் நலக்கோளாறுகள் ஆகியவற்றில் பாதிக்கப்பட்ட மனநிலையைச் சுட்டுவது, ஊக்கம், செயல்முறைகள், உணர்வுகள் ஆகியவை அதிகம் பிரதிபலிக்காமைக்கானக் காரணம் மனச்சோர்வே உச்சக்கட்ட கொடிய நிலையான மன அழுத்தம் எனப் பன்னாட்டு மகளிர் கலைக்களஞ்சியம் எடுத்துரைக்கிறது''[4]

மனச்சோர்வு இரண்டு வழிகளில் ஒரு மனிதனுக்கு ஏற்படுகின்றது.

1. இழப்பினால் ஏற்படும் மனச்சோர்வு
2. வெறுப்பினால் ஏற்படும் மனச்சோர்வு

'கனவுகள் கைப்பிடிக்குள்' நாவலில் வரும் தீபா ஒரு திருநங்கை. திருநங்கை என்றாலே பல பிரச்சனைகளை அவள் அனுபவிக்க வேண்டும். அவள் மட்டும் அல்ல அவளது குடும்பத்தாரும் தான். அவ்வகையில் தீபாவின் தங்கை இராஜாத்தி பாதிக்கப்படுகிறாள். அதாவது திருமணம் நடைபெறவில்லை. இதனால் மனமுடைந்த தீபா ''எத்தனை குறையிருந்தாலும் ஆம்பளைங்க விலை போயிடுவாங்க. எத்தனை களங்கம் இருந்தாலும் ஆம்பளைங்க இரண்டு மூணு கல்யாணம் கூடப் பண்ணிப்பாங்க. இதை யோசிச்சா ஆம்பளையா இருக்கறது பெரிய ஜாக்பாட்னு தோணுது. பொண்ணுக்குத் தான் பிரச்னை எல்லாம்''[5] என்று புலம்புகிறாள் தீபா. இப்புலம்பல் சமூகத்தின் மீது கொண்ட வெறுப்பினால் ஏற்படும் மனச்சோர்வே ஆகும்.

தான் ஆணாக பிறந்து பெண்ணாக மாறியதை நினைத்து தன் தாயின் மடியில் முகம் புதைத்து அழுகின்றாள். அப்போது தாயும் கண்ணீருடன் அவளுக்கு ஆறுதல் கூறுகின்றாள். இங்கே இழப்பின் காரணமாக இருவருக்குமே மனச்சோர்வு ஏற்பட்டதை நாம் அறியமுடிகின்றது.

**தற்கொலை**

தற்கொலை என்பது தன்னைத் தானே அழித்துக் கொள்ளும் செயலாகும். தற்கொலைப் பற்றிக் குறிப்பிடும் போது பிராய்டு ''மனிதன் ஒரு நோக்கத்துடனோ, ஒரு குறிக்கோளுடனோ, ஒரு கருத்துடனோ, மிக நெருங்கிய உறவை ஏற்படுத்திக் கொண்டு அதற்காக மட்டும் வாழ்வதையே வாழ்க்கை என்றும், அது இல்லையெனில் உலகில் மற்றவையாவும் பயனற்றவை, பொருளற்றவை, மதிப்பற்றவை என்றும் கருதுகிறான். தற்கொலைக்கு இந்த எண்ணமே காரணியாகி, மனிதன் தன்னைத் தானே அழித்துக் கொள்வதோடு, தன்னை முழுவதுமாக ஈடுபடுத்திக் கொண்டு தற்கொலை செய்து கொள்கிறான்''[6] வெறுப்புணர்வு காரணமாக, வறுமை காரணமாக தற்கொலைகள் நிகழ்கின்றன.

இந்நூலில் வரும் தீபா அதாவது திலீபன் தான் பெண்ணாக மாறியதை உணர்ந்த தருணத்தில் அவள் தற்கொலைக்கு முயற்சி செய்தாள். அவளுடைய அம்மா, தங்கை இல்லையென்றால் அவள் இன்று உயிரோடு இருந்திருக்கமாட்டாள். ''எத்தனை போராட்டம்? வலி? வேதனை? இனம் புரியாத பாதுகாப்பின்மை. ஒரு தரம் அரளி விதையை விழுதாய் அரைத்து முழுங்கி, வாயில் நுரை தள்ளி விழுந்த போது, கிராமத்து மருத்துவச்சி கூட

சிகிச்சைக்கு வரத் தயங்கினாளே….. அப்போது அம்மா தானே மாற்று மூலிகை தந்து வாந்தியெடுக்க வைத்து உயிரைக் காப்பாற்றினாள்"[7] என்ற கூற்றின் மூலம் நாம் அறியலாம்.

**கனவு**

வாழ்க்கையிலும் சரி, இலக்கியத்திலும் சரி, மனிதன் இயல்பு வாழ்வில் நிறைவு செய்யப்படாத ஓர் அனுபவத்தை நுகர்ந்து மனநிறைவு பெறுவான். எனவே கனவு என்பது நனவுலகு வாழ்வின் ஒரு மாற்று வடிவமே. இவை ஒருவனின் அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட ஓர் உண்மை உணர்வாகும். இவற்றின் விளைவே கனவு எனலாம்.

இந்நாவலில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கனவுகள் இருக்கின்றன. ஆம் தீபா, சாரதா ஆகிய இருவரை குறிப்பாக நாம் சொல்லலாம். சாரதாவிற்கு வயதாகி விட்டது. ஆனாலும் திருமணம் நடைபெறவில்லை. இதனால் அவள் மனம் வேதனையடைகின்றது. இளம்பெண்களை பார்த்தால் அவர்களிடம் தன்னுடைய நிலையை நினைத்துப் புலம்ப ஆரம்பிப்பாள். "பச்… அப்ப என் கேஸ் தான். முதிர்கன்னி வயசானாலும் கல்யாணம் பத்திக் கனவு கண்டு, கருமாதி தான் பண்ணிக்க முடியும்"[8] என்று தன்னுடைய ஆதங்கத்தை மீனாவிடம் வெளிப்படுத்துகின்றாள்.

ரவிஷங்கர் உயிரை விட மேலாக தீபாவை அன்பு செய்து திருமணம் முடிக்க ஆசைப்படுகின்றான். தீபாவிற்கும் இதில் விருப்பம் தான். ஆனால் தீபா திருநங்கை என்பதால் அவளது கல்யாண ஆசை நிறைவேறுவதாய் இல்லை. மனசெல்லாம் வாழ்க்கைக் கனவுகள் மாலையாய் மலர்ந்திருந்தாலும், வாடா மல்லியாய், வாசம் வீசாத கள்ளிப் பூவாய்க் கண்ணீர் வடிக்க வைத்து தீபாவை வேடிக்கை பார்க்கும் காலம். "அடுத்த ஜென்மத்திலேயாவது நான் பெண்ணாகவே பிறக்கணும்…. ஷங்கரை துரத்தித் துரத்தி நான் நேசிக்கணும். மனசாரச் சம்மதம் சொல்லனும். கல்யாணம் பண்ணி முத்து முத்தாய்க் குழந்தைகள் பெத்துக்கணும். ஷங்கர் இந்த ஜென்மத்திலே கனவு காணற கல்யான வாழ்க்கையை அடுத்த ஜென்மத்திலேயாவது நான் தரணும். அதுக்குத் தகுதியிருக்கறவளா முதல்லேயே பிறக்கணும் மீனா. அரை குறையா, பதினாறு வருஷம் பையனா இருந்துட்டு, அறுவை சிகிச்சையிலே பொண்ணா மாறக் கூடாது மீனா…. நடக்குமா? சொல்லு மீனா…. என் கனவுகள் நிறைவேறுமா மீனா?"[9] என்ற தீபாவின் கூற்று மூலம் நாம் அவளின் வாழ்க்கை கனவாய் மாறி போனதை அறிய முடிகின்றது.

**முடிவுரை**

ஆங்கில அறிஞர் சிக்மண்ட் ஃப்ராய்ட் மூலம் தனித்துவம் வாய்ந்த ஒரு துறையாக உருவாக்கப் பெற்றது தான் உளவியல். வாழ்க்கையின் அடிப்படையே உளவியல் மூலம் தான் உருவாக்கப்படுகிறது. உளச் சிக்கல் ஏற்படும்போது பெண் மனத்திற்குள்ளேயே பேசிக் கொள்கிறாள். வாழ்வில் இழப்பினால் ஏற்படக்கூடிய அதிர்ச்சியே மன நோக்குக் காரணம் என்பதை தன்னடைய நாவலில் தெரியப்படுத்தியுள்ளார் ஆண்டாள் பிரியதர்ஷினி.

ஆண்டாள் பிரியதர்ஷினி தன்னடைய 'கனவுகள் கைப்பிடிக்குள்' என்ற நாவலின் மூலம் பெண்களின் அகமன உணர்வுகளை தெளிவாக உளவியல் நோக்கில் படம் பிடித்துக்காட்டி அதற்கு தீர்வும் சொல்கிறார்.

**அடிக்குறிப்பு**


1. எஸ். சந்தானம், கல்வியின் உளவியல் அடிப்படைகள் ப.2
2. இரா. காஞ்சனா, பெண் உளப் பகுப்பாய்வும், பெண் மொழியும் ப.44
3. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி - 8 ப.869
4. வீ. நிர்மலா ராணி, பெண்ணியத் திறனாய்வு ப.57
5. ஆண்டாள் பிரியதர்ஷினி, கனவுகள் கைப்பிடிக்குள் பக்122 - 123
6. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி - 10 ப.59
7. ஆண்டாள் பிரியதர்ஷினி, கனவுகள் கைப்பிடிக்குள் ப.125
8. மேலது., ப. 138
9. மேலது., ப .142